Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 303
செவ்வாய்க்கிழமை
24 செப்ரெம்பர் 2024
புரட்டாதி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"புது விளக்குமாறு
பறக்க
பறக்கத்தான்
கூட்டும்
கண்டியளோ"



## வடக்கு ஆளுநர் பதவி துறந்தார்!

யாழ்., செப். 24
வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ல்ஸ் நேற்று இரவு ☞ 11

### இன்று நள்ளிரவுடன்

# நாடாளுமன்றம் கலைக்கப்படும்?

### டிசெம்பரில் பொதுத்தேர்தல்

**கொழும்பு, செப்ரெம்பர் 24**

ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றுள்ள நிலையில் அவரால் நாடாளுமன்றம் இன்று நள்ளிரவு கலைக்கப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளன. ☞ 12

### இலங்கையின் ஜனாதிபதியாக

# அநுர நேற்று பதவியேற்பு!

**கொழும்பு, செப்ரெம்பர் 24**

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பிரதம நீதியரசர் முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார். ☞ 12

விரிவுகள்:- பக். 11

**ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க**

அவர் அரச நிதி முகாமைத்துவ முதுமாணி

**பொதுமக்கள் பாதுகாப்புக்கு ரவி செனவிரத்ன செயலர்**

ரவி செனவிரத்னவின் நியமனத்தால் ஈஸ்டர் தாக்குதல்தாரிகள் கலக்கம்

பரபரப்பாகின்றது கொழும்பு

## பதவி துறந்தார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, செப். 24
பிரதமர் தினேஷ் குணவர்த்தன பதவிதுறந்துள்ளார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார். ☞ 12

**எம்மை நம்பாதவர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் பொறுப்பு இருக்கின்றது!**
ஜனாதிபதியாக அநுர கன்னியுரை
விரிவு:- பக். 11

## நேபாளத்தில் கோத்தா

கொழும்பு, செப். 24
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நேற்று இரவு நேபாளத்துக்குச் சென்றுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க புதவியேற்றதை யடுத்து, நாட்டைப் பொருளாதார நலிவு நிலைக் ☞ 11

## வருக இணைக

கொழும்பு, செப். 24
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் ஒன்றாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
ஐக்கிய மக்கள் சக்தியைத் தம்முடன் ☞ 11

## புதிய பாதுகாப்புச் செயலாளராக தமிழர்கள் மீதான தாக்குதல்தாரி

கொழும்பு, செப்.24
புதிய பாதுகாப்புச் செயலாளராக ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொண்டா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.
இலங்கையில் இடம்பெற்ற போரில் எம்.ஐ. ஹெலிகொப்டர் படைப்பிரிவின் முன்னாள் கட்டளை ☞ 11




றைனோ சிமெண்ட் ரூப்பிங் ஷீட்
சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை
RHINO
60 YEARS
www.rhino.lk
ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728
• இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் முன்னேற்றத்துக்கு ஆதரவு வழங்குவேன்

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு, செப். 24

**புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தேவைப்படும்போது ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் உத்தியோகபூர்வ இறுதி முடிவை அறிவிக்கும் விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய அநுரகுமார திஸாநாயக்கவை நான் வாழ்த்துகிறேன். நாட்டைப்பலப்படுத்தவும் நெருக்கடியிலிருந்து மீட்பதற்கும் அவருக்குப் பலம் இருப்பதாக நான் நம்புகிறேன். தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை முன்னேற்றுவதற்கு ஆதரவை வழங்குவது அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களின் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# பௌத்தத்துக்கு முன்னுரிமை!

கொழும்பு, செப்.24

ஏனைய நாடுகளில் வெளிநாடுகளிலிருந்து சென்று குடியேறியவர்களும் ஜனாதிபதியாக வரமுடியும். ஆனால், இலங்கையில் சிங்கள - பௌத்தர் மட்டுமே ஜனாதிபதியாக வர முடியும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த லக்ஷ்மன் கதிர்காமரின் மனைவி சரோஜினி கதிர்காமர் இந்து பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். இலங்கையில் பல தலைமுறைகளுக்கு முன்னர் பிறந்த ஒருவர் நாட்டுக்காகச் சேவையாற்றியிருந்தாலும் அவர் ஒரு தமிழராக இருந்தால் அவரால் ஜனாதிபதியாக வரமுடியாதுள்ளது.

உயர்நீதிமன்றம்கூட பௌத்த மேலாதிக்கத்தின் கீழே செயற்பட்டு வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ரி-6)

# வழங்கிய வாக்குறுதிகளை செயலில் காட்டவேண்டும்

## அநுரகுமாரவுக்கு லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

உரத்த குரலில் கூறியது போல் அநுரகுமார திஸாநாயக்க தனது வாக்குறுதிகளை செயலில் காட்ட வேண்டும். அதனை நாம் உன்னிப்பாக அவதானிப்பதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதுவரையான காலத்தில் அநுர தரப்பினர் ஏனைய கட்சியினரை விமர்சித்து மட்டுமே வந்தனர்.

எனினும் யார் என்ன சொன்னாலும் மக்களின் கருத்துக்கு தலைவணங்குகிறோம். அநுரகுமார திஸாநாயக்க, மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவோம். தேர்தலுக்குப் பிறகு நாட்டில் வன்முறை இல்லாத அமைதியான சூழல் உருவாகும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச)

# அநுரவுக்குப் பதிலாக லக்ஷ்மன் நிபுணராச்சி

கொழும்பு, செப். 24

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் லக்ஷ்மன் நிபுணராச்சி நியமிக்கப்படவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்குப்பட்டியலில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணராச்சி உள்ளார்.

அவர் தேர்தல் ஆணைக்குழுவினால் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவார் என்றும் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ச)



# முயற்சி வெற்றி

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

அவதூறு மற்றும் வாக்குறுதி அரசியலுக்கு மட்டுப்படுத்தாமல் புதிய அரசியல் கலாசாரத்துடன் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய நான் மேற்கொண்ட முயற்சிகள் ஓரளவுக்கு வெற்றியடைந்துள்ளன என்று பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் என்னையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியையும் நம்பிய அனைத்து பிரஜைகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது, அன்று எதிர்க்கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட 69 இலட்சம் என்ற மக்கள் ஆணையின் மூலம் இம்முறை ஜனாதிபதி தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# மக்களுக்கு நன்றி

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

தேர்தலின்போது அமைதியான முறையில் செயற்பட்டதற்காக மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இந்த ஜனாதிபதித் தேர்தலில் பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (ச)

# அமெரிக்கத் தூதுவர் அநுரவுக்கு வாழ்த்து



கொழும்பு, செப். 24

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றுள்ள நிலையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தங்கள் ஜனநாயக உரிமைகளை அமைதியான முறையில் பயன்படுத்தியமைக்காக இலங்கை மக்களைப் பாராட்டுகின்றோம்.

பகிரப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் இணைந்து செயற்படத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# நிறைவேற்று அதிகாரம்மிக்க இறுதி ஜனாதிபதி அநுரதான்

## சுனில் ஹந்துனெத்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.24

அநுரகுமார திஸாநாயக்கதான் இலங்கையில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட கடைசி ஜனாதிபதியாவார். அவர் நிச்சயம் குறித்த ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பார் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்டம் வெற்றியளித்துள்ளது. அந்தப் போராட்டத்தை ஜனநாயகவழியில் தொடர்ந்து முன்நோக்கி கொண்டுசெல்லவேண்டும். இது ஆரம்பம் மட்டும்தான். எனவே, நாட்டுக்கு நாம் சிறந்த முன்மாதிரியை வழங்குவோம். மக்கள் தேர்வு செய்த இந்த ஜனாதிபதிதான் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட கடைசி ஜனாதிபதியாக இருக்கப்போகின்றார். இனி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருக்கப்போவதில்லை. குறித்த ஜனாதிபதி முறைமையை அவர் இல்லாதொழிப்பார். இதற்கு மக்கள் ஒத்துழைக்கவேண்டும். நாடாளுமன்றம் நிச்சயம் கலைக்கப்படும் - என்றார். (ச-44)



நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து நேற்று திருகோணமலை நகர்ப் பகுதியில் கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி வெற்றிக் களிப்பில் ஈடுபட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படைத் தளபதிகளுடன் அநுரகுமார சந்திப்பு



கொழும்பு, செப்.24

முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விசேட பேச்சுவார்த்தையில் நேற்று ஈடுபட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகபூர்வமாக நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க நேற்றுக் காலை பொறுப்பேற்றுக்கொண்டார்.
இதனையடுத்து நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பில் முப்படைத் தளபதிகளுடன் விசேட கலந்துரையாடலில் ஜனாதிபதி அநுர குமார ஈடுபட்டார்.
இதேவேளை, அவருடைய பாதுகாப்புக்கு விசேட கொமாண்டோக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## ஐ.ம.சக்தி உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, செப். 24
அநுராதபுரம், ஹொரவ்பொத்தானை பிரதான வீதி அலபத்தாவ சந்தியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினரொருவர் உயிரிழந்துள்ளார்.
மற்றுமொரு பிரதேசசபை உறுப்பினர் படுகாயம் அடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் ஹொரவ்பொத்தானை பத்தாவ பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கே.எம்.றிஸ்வான் என்பவரே உயிரிழந்துள்ளார்.
விபத்துத் தொடர்பிலான விசாரணைகளை ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## இலங்கைத் தேர்தலுக்கு பாராட்டு

கொழும்பு, செப். 24
இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அமைதியாகவும், பெரிய வன்முறைச் சம்பவங்களோ, இடையூறுகளோ இன்றியும் நடைபெற்றதாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளன. தேர்தலை வெற்றிகரமாக முடிக்க உதவிய தேர்தல் ஆணையகம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரை அவர்கள் பாராட்டியுள்ளனர். அதேவேளை, இந்த தேர்தல் அமைதியாக நடத்தப்பட்டதாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். (ச)

## தேர்தல் விதிமீறிய சமூக ஊடகங்கள்

கொழும்பு, செப். 24
தேர்தல் விதிமீறல் தொடர்பான பதிவுகளை நீக்குவதற்கு சமூக ஊடக நிறுவனங்கள் மறுப்புத் தெரிவித்ததாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
தமது சட்டதிட்டங்களுக்கமைய இந்தப் பதிவுகள் விதிமீறல் அல்ல என முகநூல், யூரியூப், டிக் டொக், கூகுள் ஆகிய நிறுவனங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன.
சமூக ஊடகப் பதிவுகள் தொடர்பாக 2 ஆயிரத்து 10 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 713 முறைப்பாடுகள் வெறுப்பூட்டும் பேச்சு தொடர்பாகவும், 389 முறைப்பாடுகள் பிழையான தகவல் தொடர்பாகவும், சிறுவர்களை பிரசாரத்தில் ஈடுபடுத்தியமை தொடர்பாக 13 முறைப்பாடு களும், தேர்தல் சட்டவிதி மீறல் தொடர்பாக 664 முறைப்பாடுகளும், கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.
பிரசாரத்துக்குத் தடை விதிக்கப்பட்ட பின்னர் இடப்பட்ட விளம்பரப் பதிவுகள் தொடர்பாக 846 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார். (ரி-6)

## அநுரகுமாரவுக்கு நாமல் வாழ்த்து

கொழும்பு, செப். 24
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ சமூகவலைத்தளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மக்களின் ஆணையை மதித்து, நமது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் உங்களுக்கு பலமும் வெற்றியும் கிடைக்க வாழ்த்துகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச)





## மன்னாரில் அநுர ஆதரவாளர்களால் வெற்றிக்கொண்டாட்டம்

மன்னார், செப்.24
இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டு நேற்று திங்கட்கிழமை காலை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.
இந்த நிலையில் மன்னாரில் நேற்று ஆதரவாளர்களால் வெற்றிக் கொண்டாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மன்னார் பஜார் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட கிளையினால் வெற்றி கொண்டாட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் போது பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டு தமது வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடினர். (அ-5)

## தினம் தெரியுமோ?

ஜனாதிபதி எலக்சன் முடிஞ்சதெண்டு ஒருத்தரும் கொஞ்சம்கூட ஆய்ஞ்சு ஓய்ஞ்சு இருக்கேலாது. ஏனெண்டால் இன்னும் கொஞ்ச நாளில பார்லிமெண்ட் எலக்சன் நடக்கப் போகுது. இண்டைக்கோ, நாளைக்கோ காபந்து அரசாங்கம் ஒண்டை அமைச்சிட்டு, பார்லிமெண்டை அநுர கலைக்கப்போறாராம். அதால இப்பவே எல்லா அரசியல்வாதிமாருக்கும் பார்லிமெண்ட் எலக்சன் பற்றின பரபரப்பு தொத்திப்போட்டுது.

சஜித் பிரேமதாஸ, இந்த ஜனாதிபதி எலக்சன்ல தோத்தமாதிரி பார்லிமெண்ட் எலக்சனிலையும் தோக்கக்கூடாது எண்டு நினைக்கிறாராம். அதுக்காக இவ்வளவு நாளும் இருந்தமாதிரி விடாக்கண்டன், கொடாக்கண்டனா இருக்காமல், கொஞ்சம் விட்டுக் குடுத்துப் போறதெண்டு ஆள் முடிவு செய்து, நேற்றைக்கு ஹர் டி சில்வாவை ரணிலிட்ட தூது அனுப்பியிருக்கிறாராம். அதேமாதிரி ரணிலும் ஹரீன் பெர்னாண்டோவை சஜித்திட்ட அனுப்பி வைச்சிருக்கிறார். ஜனாதிபதி எலக்சனில சஜித்தும், ரணிலும் சேர்ந்து எடுத்த வாக்கை விட அநுர குறைவாத்தான் எடுத்திருக்கிறார். அதால தாங்கள் ரண்டுபேரும் சேர்ந்தால், ஆட்சியைப் பிடிக்கலாம் எண்டு நினைக்கினம். 'இனிமேல் எனக்கு எலக்சனில நிக்கிற ஆசையில்லை. கட்சியைப் பலமாக்கினால் காணும்' எண்டுரணில்சொல்லியிருக்கிறாராம். ஐக்கிய தேசியக் கட்சியின்ர தலைமையையும், எலக்சனில வெண்டால் பிரதமர் பதவியும் தந்தால் ஒண்டாச் சேருறதுக்கு ரெடி எண்டு சஜித்தும் பச்சைக்கொடி காட்டியிருக்கிறாராம்.

ஒரு தோல்வியை பாடமா எடுத்துக்கொண்டு அவையள் எதிரிக்கு எதிரி நண்பன் எண்டு ஒண்டாச் சேருற வழியைப் பாக்கினம். ஆனால் எங்கட ஆக்கள் என்னெண்டால், இன்னும் 'கண்ணைக்கட்டி கோபம், கண்ணாடி வந்து வெட்டும், பாம்பு வந்து கொத்தும்' எண்டு கோபம் போட்டு விளையாடிக் கொண்டிருக்கினம். அதோட தங்கட அடிப்பொடியளை வைச்சு பேஸ்புக்கிலையும் ஒரே கட்சிக்குள்ளையே பிரிஞ்சு நிண்டு ஆளையாள் உறண்டை இழுக்கிறதையே தொழிலாச் செய்யினம். இப்பிடியே இருந்தால் சிலவேளை அடுத்த எலக்சனில இஞ்சையும் எல்லாத் தொகுதியிலையும் ஜே.வி.பி.க்கே வாக்குப் போடுற நிலைக்கு சனங்கள் வந்தாலும் வரக்கூடும். எங்கட அரசியல்வாதியள் கொஞ்சம் திருந்துவினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, செப். 24

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லக்கிரு செவன தொடர்மாடிக் குடியிருப்புக்கு அருகில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இனந்தெரியாத ஆயுததாரிகளினால் இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும் நாள். மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். உறவுகளால் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கனிவான அணுகுமுறை அவசியம். பிரச்சினைகள் விலகும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். தாய்வழியில்சிலபிரச்சினைகள்ஏற்படக்கூடும். உறவினர்களால் குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டிருக்கும் பிணக்குகள் நீங்கும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் சிரமமான சூழ்நிலை காணப்படும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்ற அலையவேண்டியிருக்கும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

# அநுரவுக்கு யாழில் பொங்கல்



நாட்டின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க நேற்றுத் திங்கட்கிழமை பதவியேற்றுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகம் முன்பாக, ஆதரவாளர்கள் பொங்கல் பொங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ச-20,26,66)





# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.24

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 24 நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து, சைவப்புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் "மாணிக்கவாசகரும் அடைக்கலப்பத்தும்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும் நடைபெறவுள்ளதோடு, சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச-45)

# தியாகதீபம் நினைவாக நல்லூரில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப். 24

தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டு அவரின் நினைவாகத் தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் இடம்பெற்றது.

இந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வில் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ச-66)





# யாழில் புரட்டாதிச் சனி சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப்.24

இந்துக்கள் வழிபாடாற்றும் புரட்டாதிச் சனி விரதம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

விரதத்தை முன்னிட்டு நல்லூர்ச் சிவன் ஆலயம் உட்பட யாழ். மாவட்டத்தின் பல்வேறு சிவன் ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-45,66,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உண்மையான மாற்றம் வருமா?

இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க, நேற்றுக்காலை உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுவிட்டார். கடந்த தேர்தலில் வெறும் 3 சதவீத வாக்குகளையே பெற்றுக்கொண்ட அநுரவுக்கு இம்முறை அதிகாரக் கதிரையில் இருக்கக்கூடியளவான வாக்குகளை மக்கள் வழங்கியமை, வெறுமனே அநுர என்ற தனிநபருக்காகவோ அல்லது தேசிய மக்கள் சக்தி என்ற அரசியல் கூட்டணிக்காகவோ மட்டுமல்ல. கடந்த கால ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளால் கெட்டுக்குட்டிச் சுவராகிப் போன நாட்டின் கட்டமைப்பிலும், பொருளாதாரத்திலும், மக்களின் வாழ்வியலிலும் ஒரு பெரும் மாற்றத்தைக் கோரியே அநுரவுக்கு மக்கள் பேரலையாக வாக்களித்தனர். 'நாட்டை மாற்றுவோம்' என்ற கோஷத்தை முன்வைத்தே அநுரவும் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். எனவே அந்த மாற்றத்தை நோக்கிய நகர்வை அடுத்துவரும் மிகக்குறுகியகாலப் பரப்புக்குள் அநுரகுமார முன்னெடுத்தாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நல்லாட்சிக்காலத்திலும் இவ்வாறு மாற்றத்தைக் கொண்டுவருவேன் என முழங்கிவிட்டு பின்னர் ஒரு கோமாளியாக வெளியேறிய மைத்திரிபால போன்ற உப்புச்சப்பற்ற, இழுத்தடிப்பு நடவடிக்கைகளை அநுரகுமார மேற்கொள்வாரானால், அவரினதும், அவர் கட்சியினதும் அரசியல் எதிர்காலமே இருண்டுவிடும் அபாயமும் உண்டு.

மாற்றத்தை நோக்கிய நகர்வில் இருவகைப்பட்ட நிலைகள் உண்டு. ஒன்று, வெளியக மாற்றம். மற்றையது, உள்ளக மாற்றம். இதில் உள்ளக மாற்றமே மிகமுக்கியமானது. ஏனெனில் என்னதான் நாட்டில் மாற்றத்தைக் கொண்டுவரப்போவதாக தேசிய மக்கள் சக்தி கூவினாலும், அதன் பிரதான கட்சியான ஜே.வி.பி.யின் கடந்தகாலம் பெரும்பாலான சிங்கள மக்களுக்கோ, சிறுபான்மையின மக்களுக்கோ அவ்வளவு உவப்பானதாக இருக்கவில்லை. படுகொலைக்கலாசாரம், சிறுபான்மையினர் மீதான இனவாத ஒடுக்குமுறை என்பவற்றையே ஜே.வி.பி தன் பிரதான வழிமுறையாகக் கொண்டிருந்தது. பாரம்பரிய சிங்களக் கட்சிகளை விடவும் ஒருபடி மேலேயே தன் இனவாதக் கொள்கையை ஜே.வி.பி. கொண்டிருந்தது. கூடவே தங்கள் கருத்தோடு முரண்படும் ஊடகவியலாளர்களைத் தாக்குவது, அவர்களுக்கு புலிச்சாயம் பூசி தகவல் தர மறுப்பது போன்ற கருத்துச்சுதந்திரக் கழுத்துநெரிப்பையும் மேற்கொள்ள ஜே.வி.பி. தயங்கியதில்லை. எனவே இப்படிப்பட்ட உள்ளக மனநிலையில் இருந்து ஆத்மார்த்தமான மாற்றத்தை அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் அடைந்தாலேயே, நாட்டில் மாற்றத்தைக் கொண்டுவருவதைப் பற்றிச் சிந்திக்கமுடியும்.

நாட்டின் அத்தனை பிரச்சினைகளுக்கும் மூல காரணம், பல தசாப்தங்களாக நீடித்துவரும் இனப்பிரச்சினை மட்டுமே. இனப்பிரச்சினைக்குத்தீர்வினைக் கண்டாலேயே ஏனைய பிரச்சினைகள் படிப்படியாக நீங்கிவிடும். என்றாலும் தம் அரசியல் ஆதாயத்துக்காக முந்தைய ஆட்சியாளர்கள் அதனைத் தீர்க்காமல், இன்னும் தீவிரமாக அதனை எரியவைத்துக் குளிர்காய்ந்தனர். அதன் விளைவாகவே பெரும் உள்நாட்டுப் போரும், அதன் பின்னரான பொருளாதாரப் பேரிடரும் இலங்கையை உலுப்பியெடுத்தன. இந்தநிலையில் நாட்டில் நிரந்தரமான மாற்றத்தை நோக்கிப் பயணிக்க அநுரகுமார நினைத்தால், அவர் முதலில் செய்ய வேண்டியது இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்துவதாகவே இருக்கவேண்டும். அதை விடுத்து, முன்னைய ஆட்சியாளர்கள் போல 'நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று இல்லை, பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே நிலவுகிறது. இறுதிப்போரில் இனப்படுகொலை நடக்கவில்லை, ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தாலே போதும்' என்ற தோரணையில் அநுரகுமாரவும் நடந்து கொள்வாரானால், அதுவே மாற்றமென அவர் நம்புவாரனால், வரலாற்றின் குப்பைத் தொட்டி அவருக்காக அகலமாகவே தன் வாயைத் திறக்கக்கூடும்.



# ஓரணியில் திரள்வதை மக்கள் உணர்த்தியுள்ளனர்

ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, செப்.24**

**தமிழ்த் தேசியத்துக்காக ஓரணியில் திரள வேண்டும் என்பதை மக்கள் உணர்த்தியுள்ளனர் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான க. துளசி தெரிவித்துள் ளார்.**

கடந்த தேர்தல்களில் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்கள் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை பறைசாற்றுவதோடு தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை ஜனாதிபதியாக தெரிவு செய்கின்றவர் வழங்கவேண்டும் என்பதை கூறுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி வெற்றி அளித்திருக்கின்றது. இந்தத் தேர்தலினூடாக தமிழ் அரசியல் களத்தில் உள்ளவர்கள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்பதை மக்கள் இடித்துரைத்துள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் அனைத்துத் தேர்தல்களிலும் இதே கூட்டணி ஒன்றுபட்டு செயற்படும்.

புதிய ஜனாதிபதிக்கு எங்களுடைய வாழ்த்துகளை தெரிவிப்பதோடு தமிழ்த் தேசிய இனத்தினுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் கோரி நிற்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-110)

# தூதுவர்கள், ஆளுநர் பதவிகளில் மாற்றம்

முல்லைத்தீவு, செப்.24

ஆளுநர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் பதவிகளில் மாற்றம் வரவுள்ளது எனத் தெரியவருகின்றது. தென்மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகியோர் பதவி விலகியுள்ளனர். ஏனைய ஆளுநர்களும் பதவி விலகுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் புதிய ஆளுநர்கள் நியமனம் இடம்பெறும்.

அதேவேளை, அரசியல் நியமனத்துடன் வெளிநாட்டுத் தூதரக சேவைகளில் பிரதான பதவிகளில் உள்ளவர்களும் மாற்றப்படவுள்ளனர். இதற்குரிய நடவடிக்கை கட்டங்கட்டமாக எடுக்கப்படவுள்ளது. அரச திணைக்களங்களில் தகுதியற்ற நிலையில், அரசியல் நியமனத்தால் உயர் பதவிகளில் இருப்பவர்களின் பதவிகளும் மாற்றப்படவுள்ளன எனவும் தெரியவருகின்றது. (ச-44)



## அநுரவுக்கு மோடி வாழ்த்து

கொழும்பு, செப். 24

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவின் அண்டைநாட்டுக்கு முன்னுரிமை கொள்கையின் கீழ் இலங்கை சிறப்பு இடத்தைப்பெற்றுள்ளது. எமது மக்கள் மற்றும் முழுப்பிராந்தியத்தின் நலனுக்காக எமது பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற நான் விரும்புகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## கிழங்குகள் விலையுயர்வு

கொழும்பு, செப்.24

உருளைக்கிழங்கு விலை அதிகரித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அவற்றின் விலை தற்போது ஒரு கிலோ 200 முதல் 250 ரூபாவாக அதிகரித்துள்ளது. சில கிழங்கு வகைகளின் விலை 300 ரூபாவைத் தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் உருளைக்கிழங்கு தட்டுப்பாடு மற்றும் அதிக தேவை காரணமாகவே உருளைக்கிழங்கு விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச)

**நாளை**

25.09.2024

புதன்கிழமை - புரட்டாதி - 09

சுபநேரம் : 04.32- 06.02

ராகுகாலம் : 12.02 - 01.32

**நாளொரு நல்வார்த்தை**

**அதிகாரத்தை நாடி சுதந்திரத்தைப் பறிகொடுப்பது விபரீத ஆசை.**

- பிரான்சிஸ் பேகன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ராஜபக்சக்களின் அம்பாந்தோட்டை கோட்டை தகர்ந்தது

**கொழும்பு, செப். 24**

**ராஜபக்சக்களின் அரசியல் கோட்டையாகக் கருதப்படும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவே வெற்றிபெற்றுள்ளார்.**

பெலியத்த, முல்கிரிகல, தங்காலை மற்றும் திஸ்ஸமஹாராக ஆகிய நான்கு தொகுதிகளிலும் அநுர முதலிடம் பிடித்துள்ளார். ராஜபக்ச குடும்ப உறுப்பினரான நாமல் ராஜபக்ச நான்காவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 4 லட்சத்து 33 ஆயிரத்து 505 பேர் வாக்களித்திருந்தனர். இதில் 6 ஆயிரத்து 443 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. அநுரகுமார திஸாநாயக்க 2 இலட்சத்து 21 ஆயிரத்து 913 வாக்குகளையும், சஜித் பிரேமதாஸ ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 503 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 33 ஆயிரத்து 217 வாக்குகளையும், நாமல் ராஜபக்ச 26 ஆயிரத்து 707 வாக்குகளையும் பெற்றுள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பிலும் அநுரவே முதலிடத்தை பிடித்துள்ளார். (ச-44)

## அநுரவுக்கு வாழ்த்துக்கூறிய ஹர்ஷ

கொழும்பு, செப். 24

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமாரவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவுக்கு தீவிரமாக பிரசாரம் செய்தபோதிலும் அது பலனளிக்கவில்லை.

நண்பர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (ச)



## நாமல் கோட்டையில் அநுரவின் கொடி!

கொழும்பு, செப். 24

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவின் தேர்தல் தொகுதியும், ராஜபக்ச குடும்பத்தின் பரம்பரைத் தொகுதியுமான பெலியத்தையில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றியீட்டியுள்ளார்.

இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள சஜித் பிரேமதாஸ 16,820 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 5,460 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

வெறுமனே 5 ஆயிரத்து 385 வாக்குகளுடன் நாமல் தனது சொந்தத் தேர்தல் தொகுதியில் நான்காவது இடத்தைப் பிடித்து படுதோல்வியடைந்துள்ளார். (ச)

## ஆட்சியிலிருக்கும்போது தோற்ற ஜனாதிபதிகள்

கொழும்பு, செப்.24

ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியில் இருந்தபோதே தோற்கடிக்கப்பட்ட ஜனாதிபதிகளில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராக மாறியுள்ளார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியில் இருக்கும்போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தோல்வி அடைந்தார்.

இந்தத் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியை பதிவு செய்திருந்தார். அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகலால் வெற்றிடமாக இருந்த இடத்துக்கு ஜனாதிபதி பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்துகொண்டார். அதற்கமைய, நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியில் இருந்தபோது தோற்கடிக்கப்பட்ட ஜனாதிபதிகளின் பட்டியலில் மஹிந்தவுடன், ரணிலும் இணைந்துள்ளார். (ச-44)

## வன்னி மாவட்டத்தில் சஜித் ஆதிக்கம்



கொழும்பு, செப். 24

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அதிகளவான வாக்குகளைப் பெற்று முன்னிலை பெற்றுள்ளார்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸ 95 ஆயிரத்து 422 வாக்குகளையும் ரணில் விக்கிரமசிங்க 52 ஆயிரத்து 573, வாக்குகளையும், அரியநேந்திரன் 36 ஆயிரத்து 377 வாக்குகளையும், அநுரகுமார திஸாநாயக்க 21 ஆயிரத்து 412 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு தேர்தல்தொகுதியில் சஜித் பிரேமதாஸ 28 ஆயிரத்து 301 வாக்குகளையும், அரிய நேந்திரன் 12 ஆயிரத்து 810 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க7 ஆயிரத்து 117 வாக்குகளையும்,அநுரகுமாரதிஸாநாயக்க 3453 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

வவுனியா தேர்தல்தொகுதியில் சஜித் பிரேமதாஸ 33 ஆயிரத்து 731 வாக்குகளையும், அரியநேந்திரன் 11 ஆயிரத்து 650 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 24 ஆயிரத்து 18 வாக்குகளையும், அநுரகுமார திஸாநாயக்க 11 ஆயிரத்து 591 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

வன்னி தேர்தல்மாவட்டத்தின் மன்னார் தேர்தல்தொகுதியில் சஜித்பிரேமதாஸ 28 ஆயிரத்து 491 வாக்குகளையும், அரியநேந்திரன் 10 ஆயிரத்து 757 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 17 ஆயிரத்து 181 வாக்குகளையும்,அநுர குமாரதிஸாநாயக்க 4 ஆயிரத்து 276 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை வன்னிமாவட்டத்தில் 306081 வாக்குகள் பதிவுசெய்யப்பட்டிருந்த நிலையில் 226650 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன.

அவற்றில் 9381 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் 2 இலட்சத்து 17 ஆயிரத்து 269 வாக்குகள் செல்லுபடியானவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-110,44)

## நாமலின் மனைவி வெளிநாட்டுக்கு

கொழும்பு, செப். 24

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் மனைவி லிமினி அதிகாலை நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். லிமினி வினோஜா வீரசிங்க மற்றும் அவரது தகப்பனாரான சட்டத்தரணி திலகசிறி வீரசிங்க ஆகியோர் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த நேரம் எமிரேட்ஸ் விமானம் மூலம் டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

முன்னதாக நாமல் லிமினி தம்பதியின் இரண்டு குழந்தைகள், லிமினியின் தாயார் மற்றும் பணிப்பெண் ஆகியோர் நாட்டைவிட்டு வெளியேறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



## அநுரகுமாரவுக்கு சுமந்திரன் வாழ்த்து

கொழும்பு, செப். 24

ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இன அல்லது மத பேரினவாதத்தில் தங்கியிருக்காமல் வெற்றியை அடைந்துள்ளார். இது அவரது பிரசாரத்தை வேறுபடுத்திய ஒரு முக்கியமான காரணியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை அவருக்கு எதிராக தேர்தல் பிரசாரக் களத்தில் ஈடுபட்டவர்களும் தமது தரப்பினரின் தோல்வியை ஏற்றுக்கொண்டு அநுரவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 12 . 1951



மறைவு 18 . 09 . 2024

## R.M. தியாகராஜா இரட்ணகுமார்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சு.ஆ.தியாகராஜா இரட்ணகுமார் அவர்கள் கடந்த (18.09.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சு.ஆ. தியாகராஜா மற்றும் - தங்கரத்தினம் தம்பதியரின் மூத்த பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரமேசனின் அன்புத் தந்தையும், இராஜ்குமார், இராஜகுமாரி, இராஜினி, இராஜகுலரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராஜகுமார், இராசலிங்கம், முத்துலட்சுமி, ரேவதி, சந்தானலட்சுமி, காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் மற்றும் சித்திராவின் சகலனும், ரஜீவன், அனுசா, இரேனுஜா, வினோஜா, ஜனுயா ஆகியோரின் தாய்மாமனாரும், குமணன், அரவிந்தன், விஜிந்தன், சோபிகா, பிரியங்கா - யதுர்சன், யுரேக்கா, துவாரகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரொசான், ரோஷினி, மதினா ஆகியோரின் பெரிய தந்தையும், திருசாந்தினி, கேதீசன், காலஞ்சென்றவர்களான சபேசன், ரஜனி ஆகியோரின் சிறியதந்தையும், அக்சயாரியா, அபிநயன், ஆர்த்திகா, விசானா, ஆதிரன், அக்சன் ஆகியோரின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2024) புதன்கிழமை Hellweg, 95, 45279 essen ஜேர்மனியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"இரட்ண மகால்",
வட்டு - கிழக்கு,
சித்தன்கேணி.

தகவல் :
குடும்பத்தினர்
077 069 0261

(CR/43274) J-1

புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு

# தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கைது

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் சில கேள்விகள் கசிந்தமைக்காக மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைதுசெய்யப்பட்டுள்ளாரென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 57 வயதுடையவரெனவும் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளரே இவ்வாறு பல வினாத்தாள்களை கசியவிட்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-ஒ-இ)

# நாடாளுமன்றத் தேர்தலிலும் கூட்டணியைத் தோடர்வோம்

கொழும்பு, செப். 24

நாடாளுமன்றத் தேர்தலை கூட்டணியாகவே எதிர்கொள்வதற்கு சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளது.



ஐக்கிய மக்கள் கூட்டணியின் விசேட கூட்டமொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் பங்காளிக்கட்சி தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியமான உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொண்டு ஆட்சியைப் பிடிப்பதற்காக கூட்டணியாக களமிறங்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், சஜித் பிரேமதாஸவே தலைமைப்பதவியில் தொடரவேண்டும் எனவும் அதில் மாற்றம் வராது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-44)

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 07 . 1985



இறப்பு 05 . 09 . 2024

## ஆனந்தராசா பிரதீபன்

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்சில் வசித்து வந்தவருமாகிய ஆனந்தராசா பிரதீபன் அவர்கள் கடந்த 05.09.2024 வியாழக்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் - இந்திராதேவி தம்பதியரின் அருமைப் புதல்வரும், ரியதீபாவின் அன்புச் சகோதரரும், விஷானாவின் பாசமிகு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2024) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாழ்ப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல் :
குடும்பத்தினர்
077 272 0493

(CS/28956) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 12 . 1955



மறைவு 20 . 09 . 2024

## கந்தையா சின்னராசா

பழையகமம், முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும், பெரிய நாவலடி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னராசா (சித்தப்பா) அவர்கள் கடந்த (20.09.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் முரசுமோட்டை பழைய கமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - கற்பகம் தம்பதியரின் மகனும், பெரிய நாவலடி கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், சிவனேசசுந்தரராணியின் அன்புக் கணவரும், கௌதமன் (6ம் அணி மருத்துவ பௌதீகவியல் துறை, Department of Nuclear Science university of Colombo), கௌதமி (HNB கிளை முகாமையாளர் - யாழ்ப்பாணம்), கௌசிகன் (கனடா), கௌசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பார்வதிதேவி, கோகிலா (ஓய்வு பெற்ற ஆசிரியை மு/கலைமகள் வித்தியாலயம்), குகனேஸ்வரி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, சிவனேஸ்வரி (சுதா - ஆசிரியை கிளி/ முருகானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ருத்ரன் (யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), ஸ்வாதி ஆகியோரின் அன்புப் பேரனும், சிவயோகராணி, சிவனேசராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), சிவயோகராசா (கனடா), சிவசுதன் (கனடா), கணேசபாலேந்திரம், கெங்காதரன், சுப்பிரமணியம், யோகநாதன், ஜோதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், குலச்சந்திரன் (பிரதேச சபை - கொடிகாமம்), அனி (கனடா), வாகினி (கனடா) ஆகியோரின் சகலனும், கீர்திதியா (தென்மராட்சி கல்விச்சேவை நிலையம் - மீசாலை), சந்திரரூபன், பவானி (பிரான்ஸ்), நிசாந்தினி, ஜனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கண்டாவளை), மயூரிகா (விவசாயபீடம் கிழக்குப் பல்கலைக் கழகம்), மதுர்சிகா (விவசாய போதனாசிரியர் - விவசாயத் திணைக்களம், முல்லைத்தீவு), மதுமிலன் (உயர்தாதியர் பயிற்சிக் கல்லூரி Lanka Hospital - Colombo), யுகேதன் (கனடா), கம்ஷா (முகாமைத்துவ பீட மாணவி - யாழ் பல்கலைக் கழகம்), அபிநயா, ஐதிலயா, கவினயா (கிளி/முருகானந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் (பெரியநாவலடி, கொடிகாமம்) அவரது இல்லத்தில் நாளை (25.09.2024) புதன்கிழமை முற்பகல் 09.00 மணி அளவில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரிய நாவலடி,
கொடிகாமம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 890 0887

(CR/43275) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

- இணுவில், இந்து, கௌரவ குடும்பம், 1990, அனுசம், Quantity Surveyor, அவுஸ்திரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
- இளவாலை - கட்டுவன், இந்து, கௌரவ குடும்பம், 1991, திருவோணம், Msc Engineer, Australia, மணமகனுக்கு மணமகள் தேவை.
- இடைக்காடு - காரைநகர், இந்து, கௌரவ குடும்பம், 1992, சித்திரை, MBBS Doctor, Australia, மணமகனுக்கு மணமகள் தேவை.
- Trincomalee, இந்து, கௌரவ குடும்பம், 1993, பூராடம், Bachelor of Engineering, Newzealand மணமகனுக்கு மணமகள் தேவை.
- திருநெல்வேலி, இந்து, கௌரவ குடும்பம், 1994, ரோகிணி, BEng Computer Science, London மணமகனுக்கு மணமகள் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குடும்பம், 1989, கேட்டை, Phd in Civil Engineering, Lecturer மணமகனுக்கு மணமகள் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குடும்பம், 1988, உத்தரம், Phd in Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
- மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, கௌரவ குடும்பம், 1987, பரணி, Charted Management Accountant, London மணமகனுக்கு மணமகள் தேவை.
- பருத்தித்துறை - சாவகச்சேரி, இந்து, கௌரவ குடும்பம், 1987, பூசம், BSc Engineer, Newzealand, மணமகனுக்கு மணமகள் தேவை.

www.thaalee.com - 077 539 3728 - 077 803 8193

# அமெரிக்காவிடமிருந்து அநுரவுக்கு வாழ்த்து!

கொழும்பு, செப். 24



ஸ்ரீலங்காவின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

வாக்களிக்கும் உரிமையை அமைதியான முறையில் பயன்படுத்திய இலங்கை மக்களை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக அமைப்பின் பலம், அமைதி மற்றும் ஜனநாயக வழிமுறைகளின் மூலம் அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் குடிமக்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். ஒரு நிலையான, வளமான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தேசிய இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் அடிப்படையிலான எமது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்பட நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். எமது நாடுகளுக்கு இடையே பொருளாதார, பாதுகாப்பு மற்றும் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றும் அமெரிக்காவின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)



அநுரவின் வருகை

# பலம் பெற்றது பங்குச்சந்தை!

கொழும்பு, செப். 24

கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 11 ஆயிரத்து 096.81 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் நாள் ஒன்றுக்கான அனைத்துப் பங்குவிலைச் சுட்டெண் அதிகபட்சமாக 130.3ஆக பதிவாகியுள்ளது. மேலும், நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வு 994 மில்லியனாகப் பதிவாகி உள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 10 . 1947

மறைவு 21 . 09 . 2024

## நடராசா சண்முகலிங்கம் (லாந்து)

கோண்டாவில் மேற்கு, கலட்டி லேனை பிறப்பிடமாகவும், முத்தட்டிமட லேன் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சண்முகலிங்கம் அவர்கள் கடந்த (21.09.2024) சனிக்கிழமை அதிகாலை 2.15 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான நடராசா - சிந்தாமணி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், பொன்னுத்துரை - அருளம்மா தம்பதியரின் மருமகனும், யோகராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சீதாலட்சுமி (நேசம்மா), காலஞ்சென்ற சங்கரலிங்கம் (சற்குணம்) மகேஸ்வரி, பஞ்சலிங்கம் (சிவராசா) இரத்தினலிங்கம் (மணியம் - ஜேர்மனி) தனலட்சுமி (வசந்தி- கனடா) ஆகியோரின் சகோதரரும், மனோன்மணி, காலஞ்சென்ற தங்கநாயகம், கமலாம்பிகை , மகாதேவன், ஞானேஸ்வரி, கேசவதேவி, குகதாஸன், புஸ்பராணி (கனடா), பரமேஸ்வரன், செல்வராணி (கனடா) காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன், இந்திராணி (கனடா), விஜயராணி (கனடா), புஷ்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், குமுதினி (நோர்வே), சுதாகரன் (U.K) பிரபாகரன் (ஜேர்மனி), கோமனா (சுவிஸ்), சுபாஸ்கரன் (சுதன்-கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீநந்தகுமார் (நோர்வே), புஷ்பலதா (UK) நித்தியா, கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சௌமியா, சஜித் பிரவின்.பிரநீதன், கபினாஷ், கீர்த்திகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற குணசேகரம் , ஜோர்ஸ் (கனடா ), யோகரட்ணம் (கனடா), தாசன் (கனடா) ஆகியோரின் சகலனும், இரஜேஸ்வதி, இரஞ்சிதமலர், அன்னலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நளை (25.09.2024) புதன்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்தட்டிமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 398 5521

(CS/56278) J-1

## வேலைவாய்ப்பு

பிரசித்திபெற்ற தனியார் நிறுவனமொன்றில் வேலைவாய்ப்பு உள்ளது.

தகைமைகள் : க.பொ.த சாதாரண தரம் கணிதம் உட்பட 06 பாட சித்தி.

வயதெல்லை : 19 - 55 வயது, ஆண் , பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு : வடமராட்சி எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 741 9911

(CS/28727) J-1

## விற்பனைக்கு

யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 10 பரப்பு காணியும், யாழ் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் 30 பரப்பு காணியும், யாழ் பிறவுண் வீதியில் 2 பரப்பு காணியும் யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் வீடு, காணியும், யாழ் மின்சார நிலைய வீதியில் தனிக்கடை உடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 723 2535

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

077 138 7596, 071 999 9306

(CS/56272) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
விஸ்வகர்மா சிற்பக் கலைக்கூடம்
பரம்பரை பஞ்சகம்மாளர் / குலத்தொழில்

## கலசம்

- இராஜ கோபுர கலசங்கள்
- விமான கலசங்கள்
- வஸந்த மண்டப கலசங்கள்
- பரிவார கலசங்கள்
- பஞ்சலோக வார்ப்புச்சாமிகள் / கற்சிலைகள் முறையாக செய்து தரப்படும்.

18 கேஜ் தொடக்கம் 22 கேஜ் வரை கலசங்கள் முறையாக செய்து தரப்படும்.
6 இஞ்சி முதல் 60 இஞ்சி வரை

தொடர்பு :
விஸ்வஸ்ரீ தியாகராஜா ரவிசங்கர் ஆச்சாரி
இல. 97/2 சென் ஜேம்ஸ் வீதி,
கொழும்பு 15.
077 900 6584
vkscentre@gmail.com



(CS/56257) J-1

## இறுதியாட்டம்

இளவாலை வருத்தப்பாடாத வாலிபர் சங்கம் நடத்தும் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.15 மணியளவில் இளவாலை வாலிபத் திடலில் இளவாலை வருத்தப்பாடாத வாலிபர் சங்கத்தின் உப செயலாளர் பி.டார்சிகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலுக்குச் சென்றவர் சடலமாக நேற்று மீட்பு

## அவரின் வாயில் காயங்கள்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம் அராலியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் பொன்னாலைப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் அராலியிலிருந்து தனியாகக் கடற்றொழிலுக்குச் சென்ற மேற்படி நபரைக் காணவில்லை என்று தேடியபோதே, பொன்னாலை கடற்கரையோரமாக இராவணேஸ்வரத்துக்கு அருகாக அவர் படகில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

அவருடைய வாய்ப் பகுதியில் காயங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். திடீர் மரண விசாரணை அதிகாரியும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டதையடுத்துச் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

(ம-26-20-66-27)

# பேருந்தை மறித்து சாரதிக்கு வெட்டு

யாழ்ப்பாணம், செப். 24

கொழும்புத்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்தை மணியந்தோட்டம் 11ஆவது குறுக்கு வீதியில் நிறுத்தி சாரதியை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தால் சாரதியின் கைகளில் காயம் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுமார் 5 நாட்களுக்கு முன்னர் யாழ். பஸ் நிலையத்தில் சில யுவதிகளை அசௌகரியப்படுத்தும் வகையில் 4 இளைஞர்கள் கிண்டல் செய்து கொண்டிருந்தனர். அப்போது மேற்படி காயமடைந்த நபர், சம்பந்தப்பட்ட இளைஞர்களுக்கு அறிவித்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அந்த இளைஞர்களே சாரதியை காயப்படுத்தியுள்ளதாக, காயமடைந்தவர்களின் உறவினர்கள் சந்தேகம் வெளியிடுவதுடன் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-26)


## முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



கடந்த 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தையா இலட்சுமணன் (செல்வராசா/ சாமியார்)**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் (26.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நன்றி

தாவடி-சுதுமலை வீதி,
(தர்மலிங்கம் தூபிக்கு முன் ஒழுங்கை)
தாவடி தெற்கு, கொக்குவில்

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(CS 1426) V-1



# மரண அறிவித்தல்

## சண்முகவடிவேல் அருள்ரமேஸ் (செந்தூர்)



தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகவடிவேல் அருள்ரமேஸ் (செந்தூர்- ஆசிரியர் உடுவில் மகளிர்கல்லூரி) நேற்று (23.09.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகவடிவேல்- மலர்மணி தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும்-ராஜேஸ்வரியின் அன்பு மருமகனும் தனுஜாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும் லோசவி, துளசிஹா, ஆரூரன் ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரின் தற்காலிக வசிப்பிடமான சாதுமஹால், சிங்கம் வீதி உடுவிலில் நடைபெற்று தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் நவாலி வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாது மஹால்
சிங்கம் வீதி
உடுவில்.

தகவல்:
மனைவி

(CS 1429) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகதிகள் பாடசாலையில் இஸ்ரேல் தாண்டவம்!

**காஸா, செப். 24**
**காஸாவின் மத்திய பகுதியில் அகதிகள் தஞ்சமடைந்திருந்த பாடசாலை மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 35க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.**

கொல்லப்பட்டவர்களில் 20க்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள் என்றும், அப்பாவிப் பொதுமக்களும் சிறுவர்களும் இருந்த பாடசாலை மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் பலஸ்தீன போர்க் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் தாக்குதல்கள், மீட்புப் பணிகள் என்பவற்றைக் காண்பிக்கும் வீடியோக்களும் பலஸ்தீனத் தொண்டு நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலையின் வளாகத்தில் உச்சக்கட்ட குழப்ப நிலையும் மரண ஓலமும் நிலவுவதையும், அம்புலன்ஸ் வாகனங்கள் விரைந்து கொண்டிருப்பதையும் காண்பிப்பதாக அந்த வீடியோக்கள் அமைந்துள்ளன. தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தாக்குதலுக்கு உள்ளான பாடசாலை தம்மால் ஒருபோதும் பயன்படுத்தப்படாத ஒன்று என்றும் இது மறுவிவாதத்துக்கு இடமின்றிய போர்க்குற்றம் என்றும் ஹமாஸ் அறிவித்துள்ளது.

எனினும் இஸ்ரேலின் தரப்பிலிருந்து எந்தக் கருத்துகளும் வெளியிடப்படவில்லை. (ம)

## இந்திய வெடிமருந்து உக்ரைனின் கையில்

*ரஷ்யா அதிருப்தி*



புதுடில்லி, செப். 24

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகள் உக்ரைனால் பயன்படுத்தப்படுகின்றமை தெரியவந்துள்ளது. இதற்கு ரஷ்யா கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நேரடி வர்த்தகத்தின் கீழ் இந்த வெடிமருந்துகள் உக்ரைனுக்கு வழங்கப்படவில்லை. மாறாக இந்திய ஆயுதத் தயாரிப்பாளர்களால் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஐரோப்பிய வாடிக்கையாளர்களுக்கும் விற்கப்படும் வெடிமருந்துகளே, அந்த இரண்டாம் தரப்புகள் ஊடாக உக்ரைனுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு வருடமாக இந்த வர்த்தகம் இடம்பெற்று வரும் நிலையில், வெடிமருந்து மட்டும்தான் இவ்வாறு உக்ரைனுக்கு வழங்கப்பட்டதா? அல்லது இந்தியத் தயாரிப்பு ஆயுதங்களும் உக்ரைனுக்கு வழங்கப்பட்டுள்ளனவா? என்பது தொடர்பில் தற்போது பல்வேறு தரப்புகளாலும் புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)



## இரண்டு வாரங்களாக பற்றியெரிகிறது சிலி!

சான்தியாகோ, செப். 24

சிலியில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட காட்டுத்தீ தற்போதுவரை அங்கு தீவிரமாகப் பரவி வருகின்றது.

சிலி வால்பரைசோவின் மத்திய பகுதியில் காட்டுத் தீ பரவி வருகின்றது. இந்தத் தீ விபத்தில் சிக்கி இதுவரை 160 பேர் உயிரிழந்துள்ளனர். காட்டுத்தீயினால் கடற்கரை சுற்றுலாத் தளமான வினா டெல் மார் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 110 பேர் காணாமல் போயுள்ளனரென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிலியின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளில் கிட்டத்தட்ட 64 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளதாக அந்த நாட்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமான செனாப்ரெட் நேற்றுமுன்தினம் சிறப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

காட்டுத்தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரண்டாயிரம் தீயணைப்பு வீரர்கள் மற்றும் ஆயிரத்து 500 இராணுவச் சிப்பாய்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் 110 ஹெலிகொப்டர்களும், 250 வாகனங்களும், 20 விமானங்களும் தீயணைப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ம)



# இஸ்ரேல் - ஹிஸ்புல்லா மோதல் உச்சம்!

பெய்ரூட், செப். 24

லெபனானின் தெற்குப் பகுதியில், இஸ்ரேல் நேற்றுமுன்தினம் தொடர்வான் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நசரல்லா, தொலைக்காட்சியில் உரையாற்றிக் கொண்டிருந்த சமநேரத்திலேயே இஸ்ரேலின் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய கிழக்கின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன், தென் லெபனான் மீது விமானத் தாக்குதல்கள் மேற்கொண்டுள்ளமையை இஸ்ரேலும் உறுதி செய்துள்ளது.

ஹஸ்புல்லா அமைப்பின் பயங்கரவாத உட்கட்டமைப்பை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. பல தசாப்தங்களாக ஹிஸ்புல்லா அமைப்பு பொதுமக்களின் வீடுகளை இராணுவ மயப்படுத்தியுள்ளது. அவற்றுக்குள் சுரங்கப் பாதைகளை அமைத்துள்ளது. பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியுள்ளது. தென் லெபனானை யுத்த வலயமாக மாற்றியுள்ளது என்றும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

வடக்கு இஸ்ரேலின் பாதுகாப்பை நிலைநாட்டுவதும், பொதுமக்கள் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பும் நிலையை உருவாக்குவதுமே இஸ்ரேலின் முதன்மையான நோக்கம். போர் தற்போது வடக்கு நோக்கி விரிவாவதை இஸ்ரேல் வலுவாகவே உணர்ந்துள்ளது என்றும் இஸ்ரேலின் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இஸ்ரேல் வெளியேறுக ஐ.நா.வில் தீர்மானம்!

வொஷிங்டன், செப். 24

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும் என்று கோரும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை நிறைவேற்றியுள்ளது.

காஸா, மேற்குக் கரை என அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்தும், எதிர்வரும் ஒரு வருடத்துக்குள் இஸ்ரேல் முற்றாக வெளியேறவேண்டும் என்றுகோரும் தீர்மானத்துக்கு ஆதரவாகவே ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உறுப்பு நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

124 நாடுகள் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில், 14 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன. 43 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்துள்ளன. பிரிட்டனும், ஆஸ்திரேலியாவும் வாக்கெடுப்பை தவிர்த்துள்ள அதேவேளை அமெரிக்கா எதிர்த்து வாக்களித்துள்ளது. பலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேல் தனது சட்டவிரோத பிரசன்னத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும் என்றும் சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமக்கள்...

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன பொதுமக்கள் பாது காப்பு அமைச்சின் செயலாளராக நிய மிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் ஒப்பு தலுக்கு அமைய ஜனாதிபதியின் செய லாளரால் இந்த நியமனக் கடிதம் ரவி செனவிரத்னவுக்கு வழங்கப்பட்டது.

ரவி செனவிரத்ன, கொழும்புப் பல்கலைக் கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான அவர், விசேட அதிரடிப் படை யின் ஆரம்பகால உறுப்பினராகவும், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளராகவும், தாய்லாந்துக் கான இலங்கைத் தூதரகத்தின் முன் னாள் செயலாளராகவும், இன்டர்போல் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதியின் செயலாளராக கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நியமிக்கப்பட் டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நந்திக சனத் குமாநாயக்க அபிவிருத்தி பொருளாதாரத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவராவார். அத்துடன், அரச நிதி முகாமைத்துவம் மற்றும் அரச பொருளி யல் தொடர்பில் முதுமாணிப் பட்டம் பெற் றுள்ளார் மற்றும் வறுமை ஒழிப்புப் போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றவ ராவார். அவர் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரா கவும் பணியாற்றியுள்ளார்.

ஜனாதிபதியாக அநுரகுமார திஸா நாயக்க பதவியேற்ற பின்னர் வழங்கப் பட்ட முதல் நியமனம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ-ச)

## ரவி...

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன பொதுமக்கள் பாது காப்பு அமைச்சின் செயலாளராக நிய மிக்கப்பட்டுள்ளமையால் ஈஸ்டர் தாக்கு தலின் பிரதான சூத்திரதாரிகள் என்று குற்றஞ்சாட்டப்படுபவர்கள் கலக்கத்தில் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலில் முன்னாள் உளவுத் துறை அதிகாரி சுரேஷ் சாலே, பிள்ளை யான் மற்றும் இன்னும் சில அரச உயர் மட்டங்களுக்கும் தொடர்பு என்ற தக வலை முதன்முதலில் வெளிப்படுத்திய வர் ரவி செனவிரத்னவே. அவர் தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை யானது ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட விவ காரங்களின் உண்மைத்தன்மையை நிலைநாட்டுவதற்காக அநுர மேற்கொண்ட முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவலை வெளிப்படுத்தியமைக்காக, கோத்தாபய வின் ஆட்சிக்காலத்தில் ரவி செனவிரத் னவைக் கைதுசெய்ய பல்வேறு முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. தான் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு நீதிமன் றத்தில் ரவி செனவிரத்னவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்று தற்போதும் நடைபெற்று வருகின்றது. இவ்வாறன தொரு பின்னணியிலேயே ரவி சென விரத்னவின் நியமனம் அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## நேபாளத்தில்...

குத்தள்ளியவர்கள் மற்றும் ஊழல் மோச டியாளர்களைக் கைது செய்வதற்கு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. அத்தகையவர்கள் நாட்டின் எந்த வொரு விமான நிலையத்துக்குச் சென் றாலும் அவர்களைக் கைதுசெய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ள நிலையிலேயே, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறி நேபாளத்துக்குச் சென் றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கோத்தாபய நாட்டைவிட்டுத் தப்பிச் செல்லவில்லை என்றும், முறை யான அனுமதியைப் பெற்று வழிபாட்டுத் தலங்களைத் தரிசிக்கவே சென்றுள்ளார் எனவும் இன்னும் சில தகவல்கள் வெளி யாகின. (அ-ம)

## புதிய...

அதிகாரியாகச் செயற்பட்ட ஓய்வுபெற்ற எயார்வைஸ்மார்ஷல்சம்பத்துயகொன்டா தமிழர்கள் மீதான பல்வேறுபட்ட தாக்கு தல்களுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவராவார். தமிழ்ப்பகுதிகள் மீது அவர் மேற் கொண்ட வான்வழித் தாக்குதல்களுக் கான பல்வேறு விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

அத்துடன், அவர் அநுராதபுரம் விமானப் படைத் தளத்தின் முன்னாள் கட்டளை அதிகாரி, சீனத் துறைமுக விமானப் படைக் கல்லூரியின் முன்னாள் பீடாதி பதி, பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதரக அலுவலகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் கட்டுநா யக்க சர்வதேச விமானப்படைத் தளத் தின் கட்டளை அதிகாரி மற்றும் விமானப் படைத் தலைமையகத்தின் முன்னாள் பயிற்சிப்பணிப்பாளர் என்று பல்வேறுபட்ட பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து தீவிர அரசியலில் ஈடுபட்டமைக்காக அவரை ஸ்ரீலங்கா விமானப்படை கறுப் புப் பட்டியலில் சேர்த்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (அ-ம)

## எம்மை...

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் எனக்கு வாக்களித்திருக்காத நிலையில், எனக்கு வாக்களிக்காதவர்களின் நம்பிக் கையையும் வென்றெடுப்பது மிகப்பெரிய பொறுப்பாக இருக்கின்றது. அதைச் சரி வர ஈடேற்றமுடியும் என நம்புகிறேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பு ஆற் றிய கன்னியுரையில் தெரிவித்துள்ளார். அவரது உரையில் மேலும் தெரிவித்ததா வது:-

**ரணிலுக்கு நன்றி**

தேர்தலின்போது வாக்குகளை அளித் தல் மற்றும் ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்வதால் மாத்திரம் ஜனநா யகம் முற்றுப்பெற மாட்டாது. அது ஜன நாயகத்தின் ஓர் அடிப்படை அம்சமாக அமைந்தபோதிலும் எமது நாட்டில் ஜன நாயகத்தைப் பலப்படுத்துவதற்காக கட் டமைப்புகளின் பலம் பொருந்திய தன்மை அதைப்போலவே சட்டங்களின் பலம்வாய்ந்த தன்மை அவசியமென் பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே நான் முதலில் எமது நாட்டு மக் களுக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த நாட்டின் ஜனநா யகத்துக்காக எனது உச்சளவிலான அர்ப்பணிப்பை எனது பதவிக்காலத்தில் வெளிக்காட்டுவேன். அதைப்போலவே எமது நாட்டில் தேர்தலொன்றின்போது, அதிகாரப் பரிமாற்றத்தின்போது அது ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற வரலாறு நிலவுகிறது. ஒருபோதுமே தேர்தலொன் றின்போது இடம்பெறுகின்ற அதிகாரப் பரிமாற்றத்தை எந்தவொரு தலைவரும் நிராகரித்ததில்லை. அதற்கிணங்க செய லாற்றி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையை சுமு கமாக ஏற்றுக்கொண்டு இந்த ஜனநாயக ரீதியான அதிகாரப் பரிமாற்றத்துக்கான அவருடைய அர்ப்பணிப்பையும் முன்மா திரியான தன்மையையும் வெளிக்காட்டி யமைக்காக நன்றிகூறக் கடமைப்பட்டுள் ளேன்.

**அரசியல்வாதிகள் மீது வெறுப்பு**

அதைப்போலவே எங்களுக்குக் கிடைப் பது சவால்கள் நிறைந்த ஒரு நாடே என் பதை நாங்கள் மிகவும் ஆழமாக விளங் கிக் கொண்டிருக்கிறோம். எமது அரசிய லில் இதைவிட பரிசுத்தமாக்கப்படவேண் டிய, மக்கள் மிகப் பெரியளவில் எதிர் பார்க்கின்ற சாதகமான அரசியல் கலா சாரமொன்றின் தேவை நிலவுகிறது. நாங்கள் அதற்காக அர்ப்பணிப்புச் செய்யத்தயார். எமது நாட்டின் அரசியல் வாதி மற்றும் அரசியல் பற்றி பிரஜைகள் மத்தியில் பாதகமான ஓர் அபிப்பிராயமே நிலவுகிறது. அது பொருத்தமற்ற ஒரு இடமென்ற கருத்தே நிலவுகிறது. எனவே நாங்கள் எமது பக்கத்தில் உச்சளவில் மீண்டும் அரசியல் பற்றியும் அரசியல் வாதி பற்றியும் மக்களின் நன்மதிப்பை யும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற் காக எமது தரப்பில் ஆற்றக்கூடிய பணி களை ஆற்றத்தயார்.

**நான் வித்தைக்காரனல்ல**

அத்துடன் எங்களுக்குக் கிடைக்கின்ற இந்த ஆழமான நெருக்கடியானது வெறுமனே ஓர் அரசாங்கம் அல்லது அரசியல் கட்சி அல்லது ஒரு தனிநபரால் மாத்திரம் கடந்து செல்லக்கூடிய நிலை யில் இருப்பதாக நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் இதற்கு முன்னரும் நான் ஒரு மாயாஜால வித்தைக்காரன் அல்ல வெனக் கூறியிருக்கிறேன். நான் இந்த நாட்டில் பிறந்த ஒரு சாதாரண பிரஜை. ஆற்றல்கள் இருக்கின்றன. ஆற்றாமை களும் இருக்கின்றன. நாம் அறிந்த விடயங்களும் இருக்கின்றன. அறியாத விடயங்களும் இருக்கின்றன. ஆனால் என்னுடைய முதன்மைப்பணி ஆற்றல் களை உறிஞ்சி எடுத்து அறிந்தவற்றை ஒன்று திரட்டி மிகச் சிறந்த தீர்மானங் களை மேற்கொண்டு இந்த நாட்டை நெறிப்படுத்துவதாகும். அதனால் அந்தக் கூட்டான இடையீட்டின் பங்காளியாவதே என்னுடைய பொறுப்பாகும். அதுபோலவே இந்த நெருக்கடியை நிறைவு செய்யும் போது அனைத்துத் துறைகளையும் சேர்ந்த பொதுப்பிரஜைகளுக்கு ஒரு பெரும் பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை ஈடேற்றுவதற்காக நான் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப் பினை எதிர்பார்க்கிறேன்.

உலகநாடுகளுடன் இணைந்து பயணம் ஆனால் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் என்னிடம் ஒரு தலையாய பொறுப்பு இருப்பதாக நான் நம்புவ தோடு இந்தச் சவாலை வென்றெடுப்ப தற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாற்றுவதற்காக என்னிடம் கைய ளிக்கப்பட்டுள்ள பொறுப்பை நான் முறைப்படி ஈடேற்றுவேன் என்பதை இந்தச் சமூகத்துக்கு நிரூபித்துக் காட்டு வேன். அதைப்போலவே குறிப்பாக எமது நாட்டுக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகும். உலக நாடுகள் மத்தி யில் எத்தகைய அதிகாரப்பிளவுகள் இருந்தாலும் நாங்கள் உலகில் தனி மைப்படுத்தப்பட்ட ஒரு நாடாக அமைந்து விடமுடியாது. உலகத்துடன் கூட்டாக ஒருங்கிணைந்து பயணிக்கவேண்டும். அதற்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்வதில் நாங்கள் ஒருபோதுமே தயங்கமாட்டோம். அதைப்போலவே எமது நாட்டைக் கட்டியெழுப்புகையில் கைத் தொழில் அதிபர்கள், தொழில் முனை வோர் முக்கியமானவர்களாகக் கருதப்ப டுவார்கள். எனவே அவர்களைப் பலம் பொருந்தியவர்களாகக் கட்டியெழுப்ப அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுவார்களென நாங்கள் நம்புகிறோம்.

இறுதியாக நான் கூறிவைக்க விரும்புவது எமது நாட்டின் ஜனநாயகத்தால் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டி ருக்கிறேன். அவ்வாறு தெரிவு செய்து கொள்வதற்காக மக்கள் எனக்கு வாக்க ளித்திருக்கிறார்கள். எனக்கு அளிக்கப் படாத வாக்குகளும் இருக்கின்றன. எனவே எமது வெற்றியின் உள்ளடக்கம் மற்றும் அளவுபற்றி எமக்குச் சிறந்த புரிந்துணர்வு இருக்கின்றது. எனவே எமக்கு ஒத்து ழைப்பு நல்காத, எம்மை நம்பாத பிரஜை களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள் வதும் அவர்களின் நம்பிக்கையை வென் றெடுப்பதும் எனது ஆட்சிக்காலத்தில் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப் பாக அமைகின்றது. அந்தப் பணியைச் சரிவர ஈடேற்ற முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எதிர்காலத்தில் இவையனைத்துமே நடைமுறையில் சாத்தியமானதாக அமைகின்ற அனுப வத்தை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக உங்களுடைய ஒத் துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறேன் - என்றார். (அ-ஒ-5-44-20)

## வருக...

இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசி யக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் அநுர தரப்பி னரின் தேசிய மக்கள் சக்திக்கு எதிராகப் பலம் வாய்ந்த அணியாகக் களமிறங்க வுள்ள தேவை ஏற்பட்டுள்ளதாலேயே இந்த இரு தரப்பினரும் ஒன்றாக இணை யும் வகையிலான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவ ருவான் விஜயவர்த்தன, தலதா அத்து க்கோரள உள்ளிட்ட உயர்மட்ட உறுப்பி னர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எட் டப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையி லேயே ஐக்கிய மக்கள் சக்திக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்து டன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணை யவிரும்பும் ஏனையவர்களும் விரும்பி னால் இணைந்துகொள்ளமுடியும் என் றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட் டக் குழு தெரிவித்துள்ளது. (அ-ம-6)

## வடக்கு...

பதவி விலகியுள்ளாரென ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவிகளைத் துறந்து வரும் நிலையில் வடக்கு மாகாண ஆளுநரும் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அனுப்பி வைத்துள் ளார். (அ-ஒ-5-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு 11 பில்லியன் ரூபா தேவை

## தேர்தல்கள் ஆணைக்குழு மதிப்பீடு

கொழும்பு, செப். 24

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 11 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இரண்டரை வருடங்கள் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தால் தேர்தலை நடத்துவதற்குரிய நிதி உள்ளிட்ட உதவிகளை வழங்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. அரசாங்கக் கூட்டிணைவு நிதியத்தில் இருந்து அதற்குரிய நிதியை அவர் வழங்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் குறைநிரப்புப் பிரேரணை ஊடாக நிதியைப் பெற்று வழங்கலாம்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 11 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை விடவும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவே அதிகம் செலவாகும். 22 தேர்தல் மாவட்டங்களிலும் வேட்புமனுக்களைப் பெறவேண்டும், நிறைய வளங்களைப் பயன்படுத்த வேண்டிவரும். ஆயினும் குறைந்தளவு செலவுடன் தேர்தலை நடத்த எதிர்பார்க்கின்றோம்" - என்றார். (ம-44)

## விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம், செப்.24

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களுக்கு 'ஸ்கந்தகுரு ஞான பானு' விருது வழங்கும் விழா சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விருதை சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் வழங்கிக் கௌரவிப்பார். (45)

# தலதாமாளிகையில் வழிபட்ட அநுர

கொழும்பு, செப். 24

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் கண்டிக்குச் சென்று பிரதான பௌத்த பீடங்களில் வணக்கம் செலுத்தினார். தலதா மாளிகையில் வணக்கம் செலுத்திய பின்னர், மல்வத்து அஸ்கிரி பீடத்தின் முக்கியஸ்தர்களை ஜனாதிபதி சந்தித்தார். (ஒ-இ)

## மஹாசண்டி ஹோமம்

யாழ்ப்பாணம், செப்.24

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான மஹாசண்டி ஹோமம் வசந்தபுரம் களபாவோடை ஏழாலை தெற்கில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 6 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறவுள்ளது. (ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். - கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் கல்லூரியின் பஞ்சலிங்கம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் பெ.வசந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-66)

## மக்களின் விருப்பம் நிறைவேறவேண்டும்

### டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப்.24

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று நிகழவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களின் மனவிருப்பங்கள்

நிறைவேற்றப்படவேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களின் மன விருப்பங்களுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். சமத்துவமான தேசத்தை உருவாக்கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி தோழர் அநுரகுமார திஸாநாயக்க அனைத்து மக்களினதும் கனவுகளை ஈடேற்றுவார் என்பதையும் எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)

# ஜின்பிங் வாழ்த்து

கொழும்பு, செப்.24

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமாரதிஸாநாயக்கவுக்கு சீன ஜனாதிபதி ஜின்பிங்தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள், இருநாடுகளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில் இருநாடுகளும் பரஸ்பரம், ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

இதன்மூலம் இருநாடுகளும் நட்புறவுமிக்க சகவாழ்வு வெவ்வேறு அளவிலான நாடுகளிடையிலான பரஸ்பரம் நன்மையளிக்கக் கூடிய ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான சிறந்த உதாரணங்களாகும்

நான் இலங்கை - சீன உறவுகளுக்கு பெரும்முக்கியத்துவத்தை வழங்குகின்றேன் உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் வெற்றிகரமான விடயங்களை சாதிப்பதற்கும் நான் ஆர்வமாக உள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## அநுர...

ஜனாதிபதியின் செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் பதவியேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்வமதத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

ஜே.வி.பி.யின் கட்சித் தலைமையகத்தில் இருந்து பதவியேற்பதற்காக அநுரகுமார திஸாநாயக்க வாகனத் தொடரணி எதுவுமின்றி தனியொரு வாகனத்தில் வந்தார். பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவியேற்ற பின்னர் சர்வமதத் தலைவர்களிடம் ஆசிபெற்று, அதன் பின்னர் மக்களுக்கு உரையாற்றினார்.

பதவியேற்பு நிகழ்வின்போது படையினரின் அணிவகுப்பு மரியாதையோ அல்லது அரசமுறை துப்பாக்கி வேட்டுகளோ தீர்க்கப்படவில்லை. தேசிய கீதத்துடன் பதவியேற்பு நிகழ்வு முடிவடைந்தது. தேசிய கீதம் இசைக்கப்படும்போது பௌத்த துறவிகள் எழுந்து நின்று மரியாதை செலுத்தியதும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பதவியேற்ற பின்னர் கண்டி தலதாமாளிக்கைக்குச் சென்று ஜனாதிபதி வழிபாடுகளில் ஈடுபட்டார். மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றார். கண்டி விநாயகர் கோவிலுக்கும் சென்றிருந்தார். பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து ஆசிபெற்றார். பள்ளிவாசலுக்கும் சென்றிருந்தார்.

இதேவேளை - 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றபோதும் இவ்வாறாக எளிமையான முறையிலேயே பதவியேற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## நாடாளுமன்றம்...

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையால், நாடாளுமன்றத்தில் அவரது இடத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் லக் ஷ்மன் நிபுண ஆராச்சியின் பெயர் வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அவர், வெளியில் ஒரு சமாதான நீதிவான் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக இன்று சத்தியப்பிரமாணம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் நாடாளுமன்ற உறுப்பினரானதும், அமைச்சரவை நியமனம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இன்று நள்ளிரவு நாடாளுமன்றக் கலைப்புக்கான வர்த்தமானி வெளியிடப்படும் எனவும், நாடாளுமன்றக் கலைப்புக்கான வர்த்தமானி வெளியிடப்படும்போது புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான திகதியையும் அதில் ஜனாதிபதி அநுரகுமார குறிப்பிடுவார் என்றும் தெரியவருகின்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட மறுநாளிலிருந்து 10 தொடக்கம் 17 நாள்களுக்குள் வேட்புமனுக் கையேற்பு நடைபெற்று 5 தொடக்கம் 7 வாரங்களுக்குள் பொதுத் தேர்தலும் நடத்தப்படும். அதன் பிரகாரம் பெரும்பாலும் டிசெம்பர் மாத முற்பகுதியில் அதாவது டிசெம்பர் 7ஆம் திகதியளவில் தேர்தல் நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-5-44)

## பதவி...

பிரதமர் தினேஷ் குணவர்த்தன பதவிதுறந்ததையடுத்து அமைச்சரவை கலைந்துள்ளது. (அ-ஒ-இ)

**Job Vacancy**

**தகைமைகள்**

- O/L or A/L
- வயதெல்லை : 18-30
- பெண்கள் விரும்பத்தக்கது.

முன்அனுபவம் தேவையில்லை
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**இடம் : யாழ்ப்பாணம் & நெல்டியடி**

தொடர்புகளுக்கு: **077 9981 914**
**076 7712 172**

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

- சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில்
- Over 11 kg UK-1350 /=, Germany 2350 /=, Franee 2300 /=, Canada 2500 /=

Lanka Cargo Worldwide Express
315, Kasthuriyar Road, Jaffna.
[illegible]

**பணியாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரித்தல், வீட்டுச் சமையலுக்கு உதவி செய்தல் மற்றும் இதர வீட்டு வேலைகள் செய்வதற்கு பணியாளர் உடன் தேவை.

தொடர்பு: **078 7311 049**

**உடனடி வேலைவாய்ப்பு**

சர்வதேச பொதிகள் சேவை நிறுவனத்தின் யாழ். கிளைக்கு வேலையாட்கள் தேவை. ஆண்/பெண் இருபாலாரும். பயிற்சியுடனான வேலை வாய்ப்பு.

தொடர்பு: **074 044 8903**

**வேலை ஆட்கள் தேவை**

பிரபல விற்பனை விநியோக நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep) மற்றும் விற்பனை உதவியாளர் (helper) தேவை

**யாழ்ப்பாணம், கோண்டாவில், மானிப்பாய் அருகாமையில் இருப்பது விரும்பத்தக்கது**

தொடர்புகளுக்கு:
**075 466 5555, 021 221 3788**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.